வேலூர் மாவட்டக் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 10/ஒபக/SMC/2024 நாள்:25.07.2024

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் - 2024-2026 ஆம் ஆண்டிற்கான பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நிகழ்வுகள் - **பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டம்** நடத்துதல்-மறுகட்டமைப்பு நிகழ்வுக்கு முன்பாக செய்ய வேண்டிய பணிகள்-அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் தெரிவித்தல் - சார்பு.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.144, நாள்:28.06.2024 பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை.

2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.1342/A11/பமேகு/ஒபக/2024 நாள்: 12.07.2024 மற்றும் 16.07.2024.

மேற்காணும் பார்வை மற்றும் பொருளுக்கிணங்க, குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள், 2011 அடிப்படையில் அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2022ஆம் ஆண்டு முதல் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மறுகட்டமைப்பு செய்யப்பட்டு, உறுப்பினர்களின் பதவிக் காலம் 2024-ஆம் ஆண்டு நிறைவடையும் நிலையில், பார்வையில் காணும் அரசாணை வழிகாட்டு நெறிமுறைகளின்படி, அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் 2024-2026 ஆண்டுகளுக்கானப் பள்ளி மேலாண்மைக் குழுவானது, புதிய உறுப்பினர்களைக் கொண்டு மறுகட்டமைப்பு செய்யப்படவுள்ளது.

எனவே, மறுகட்டமைப்பு நிகழ்வுக்கு முன்பு செய்ய வேண்டிய பணிகளைப் பார்வையில் காணும் அரசாணையில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மேற்கொள்ளுமாறு மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி/இடைநிலை), வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ) அனைத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- பள்ளி மேலாண்மைக்குழு குறித்துப் **பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் 02.08.2024 (வெள்ளிக்கிழமை)** அன்று நடத்திடவும், கூட்ட அழைப்பிதழினை பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு புலனக்குழுச் (வாட்சப்) செய்திகள், துண்டுப் பிரசுரங்கள் அல்லது பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மூலமாக பார்வை-1ல் காணும் அரசாணை **பக்கம் 17 மற்றும் 18, வரிசை-4ன் கீழ்** கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி **31.07.2024 புதன்கிழமைக்குள் பெற்றோர்களுக்கு அழைப்பு விடுக்க** அனைத்து அரசுப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- ❖ பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நிகழ்வன்று தலைமையாசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பார்வை-1ல் காணும் அரசாணை பக்கம் 22 மற்றும் 23, வரிசை-6ல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைபிடித்துப் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்திட, அனைத்து அரசுப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- ❖ **பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நிகழ்வு கால அட்டவணை**

மாநிலம் தழுவிய பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நிகழ்வானது, கீழ்காண் கால அட்டவணையில் உள்ளவாறு நடத்திட, அனைத்து அரசுப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண். | மறுகட்டமைப்பு நடைபெறும் நாள் | பள்ளி வாரியாக |
|---|---|---|
| 1 | 10.08.2024-சனிக்கிழமை | முதல் 50% தொடக்கப்பள்ளி (முதற்கட்டம்) |
| 2 | 17.08.2024-சனிக்கிழமை | மீதமுள்ள 50% தொடக்கப்பள்ளி (இரண்டாம் கட்டம்) |
| 3 | 24.08.2024-சனிக்கிழமை | உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் |
| 4 | 31.08.2024-சனிக்கிழமை | நடுநிலைப்பள்ளிகள் |

மேற்காண் கால அட்டவணையை பின்பற்றி மறுகட்டமைப்பு சிறப்பாக திட்டமிட்டு எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் நடத்திடவும், தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுக்கு தகவல் தெரிவித்து கண்காணிக்க வேண்டுமென, மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி/இடைநிலை), வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>முக்கிய குறிப்புகள் :</u>

- ❖ பெற்றோர்கள் அனைவரையும் கண்ணியத்தோடு நடத்துவதை தலைமையாசிரியர் உறுதி செய்ய வேண்டும்.
- ❖ பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தெரிவுச் செய்யப்பட்ட பிறகு தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் பெற்றோர்களுடன் பள்ளி வளர்ச்சி குறித்து பேசுதல் வேண்டும்.
- ❖ இறுதியாக உறுப்பினர்கள் அனைவரும் கூட்டப் பதிவேட்டில் கையெழுத்திட வேண்டும்.
- ❖ அனைத்து உறுப்பினர்களின் கைபேசி எண் மற்றும் முகவரியைத் தவறாமல் பதிவேட்டில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

- ❖ தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியலை அவர்களின் பொறுப்பு விவரங்களுடன் பள்ளியின் அறிவிப்பு பலகையில் அனைவரும் பார்க்கும் படியான இடத்தில் ஒட்ட வேண்டும்.

- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது உறுப்பினர்களும் ஒரு குழுவாகப் புகைப்படம் எடுத்துக்கொள்வது சிறப்பாக இருக்கும்.

- ❖ தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பட்டியல் மற்றும் அவர்களது குழு புகைப்படம் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

- ❖ இணைப்பில் உள்ள கடித நகலில் உள்ள படிவங்களை பூர்த்தி செய்து EMIS தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

- ❖ தேர்வு செய்யப்பட்டவர்களின் முழுவிவரம் பள்ளி மேம்பாட்டுத் திட்ட செயலியில் பதிவிட வேண்டும். உறுப்பினர்களின் பதவி மற்றும் பிரதிநிதித்துவம் குறித்துப் பள்ளிக் கல்வித் துறையின் அரசாணை நிலை எண்.144 நாள்: 28.06.2024-ல் கூறியுள்ளவாறு தவறாமல் பின்பற்றி பள்ளி மேலாண்மைக் குழுக்களை மறுகட்டமைப்பு செய்யப்பட வேண்டும்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
மாவட்டத் திட்ட அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு :

1. அரசாணை நகல்.
2. கூட்ட அழைப்பிதழ்கள் மற்றும் கால அட்டவணை.
3. படிவங்கள்

பெறுநர் :

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி/இடைநிலை), வேலூர்.
2. அனைத்து ஒன்றிய வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்து ஒன்றிய வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ) / ஆசிரியர் பயிற்றுநர்கள் வேலூர் மாவட்டம்.
4. அனைத்து அரசு தொடக்க/நடுநிலை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், (மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள்(பொ) மூலமாக).